# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

## வெற்றிகரமாக்குவோம் செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை!!!

அன்பார்ந்த தோழர்களே,

செப்டம்பர் 2 அன்று நாடு தழுவிய அளவில் பொது வேலை நிறுத்தம் நடத்துவது என பல மாதங்களுக்கு முன்னரே அகில இந்திய அளவில் செயல்படும் அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் அறிவிப்பு கொடுத்திருந்தன. மத்திய அரசாங்கம் அனைத்து தொழிற்சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. இறுதியாக அமைச்சர்கள் குழு ஒன்று ஆகஸ்ட் 26 மற்றும் 27ஆம் தேதிகளில் நடத்திய பேச்சு வார்த்தையில் நடைபெற்ற விஷயங்கள் தொடர்பாக அனைத்து தொழிற்சங்கங்களும் 28.08.2015 அன்று புதுடெல்லியில் உள்ள INTUC அலுவலகத்தில் கூடி இந்த பேச்சு வார்த்தை தொடர்பாக விவாதித்தது. இந்த அமைச்சர்கள் குழு, எந்த ஒரு பிரச்சனைக்கும் ஸ்தூலமான தீர்வை கூறாமல் வெத்து உறுதி மொழிகளை மட்டுமே கொடுத்துள்ளது என அந்தக் கூட்டத்தில் ஏகோபித்த முடிவு செய்யப்பட்டு, செப்டம்பர் 2 பொது வேலை நிறுத்தத்தை உறுதியாக நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

நிலைமை இவ்வாறு இருக்க ஒரு சிலர் வதந்திகளை பரப்பி வருகின்றனர். மத்தியில் ஆளுகின்ற கட்சியின் பிரச்சார கருவிகள் எவ்வளவு பலமானது என்பது நம் அனைவருக்கும் தெரியும். அவர்கள் உண்மையற்ற விஷயங்களையும், உண்மைகளை திரித்தும் கூறுவார்கள்.

மத்திய ஆட்சியாளர்களின் தவறான பொருளாதார கொள்கைகளை எவ்வளவு உறுதியாக எதிர்த்து வருகிறோமோ, அதே உறுதியுடன் இந்த பொய் பிரச்சாரத்தையும் நாம் எதிர்கொள்ள வேண்டும்.

மக்களை பிரித்து எவ்வாறு ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுகிறார்களோ, அதே போல தொழிலாளர்களை பிரிக்க கடும் பிரயத்தனம் செய்து வருகின்றனர். ஒன்று பட்ட தொழிலாளி வர்க்கம்தான் தேசத்தின், ஏழை எளிய நடுத்தர மக்களின், பொதுத்துறைகளின் நலன்களை பாதுகாக்க முடியும். எனவே நாம் ஆட்சியாளர்களின் விஷமப் பிரச்சாரங்களை முறியடித்து செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை முழு வெற்றி பெறச் செய்வோம்.

அனைத்து ஊழியர்களையும் நேரடியாக சந்தித்து, கோரிக்கைகளை விளக்கி கூறி எந்த ஒரு சஞ்சலமும் இன்றி உறுதியோடு வேலை நிறுத்தத்தில் பங்கேற்க செய்ய வேண்டிய இறுதி கட்டம் இது. பந்தயத்தில் எல்லைக்கோட்டை தொடும் வரை வேகமாக ஓட வேண்டிய அவசியம் உள்ளதை உணர்ந்து செப்டம்பர் 2 வேலை நிறுத்தம் முழு வெற்றி பெறும் வரை நாம் ஓயாது உழைப்போம். தேசத்தை காக்க, தேசத்தில் உள்ள ஏழை எளிய நடுத்தர மக்களின் வாழ்வை காக்க, பொதுத்துறைகளை பாதுகாக்க செப்டம்பர் 2 அன்று தேசத்தை ஸ்தம்பிக்க செய்வோம். வெற்றிகரமாக்குவோம் வேலை நிறுத்தத்தை.

**தொழிலாளர் ஒற்றுமை ஓங்கட்டும்!**

**தொழிற்சங்க ஒற்றுமை ஓங்கட்டும்!!**

**செப்டம்பர் 2 வேலைநிறுத்தம் வெல்லட்டும்!!!**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**

மாநில செயலாளர்